**<u>பொள்ளாச்சி நகராட்சி</u>**
**<u>அவசரக் கூட்டம்</u>**

**16.10.2025 ம் தேதி வியாழக்கிழமை காலை 11.45 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தை தொடர்ந்து நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

| வ. எண் | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, அரசு கலை கல்லூரி சாலையில் ரூபன் ஸ்டோர்ஸ் அருகில் குறைந்த உயரம் கொண்ட தெருவிளக்கு (Minimast 7 மீட்டர்) சோலார் பேனல் பொருத்தி தானியங்கி முறையில் (4x100W) LED தெருவிளக்குகள் பொருத்தி ஒளிரவிட ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 6033/2025/இ1** | **தீர்மானம் எண் 1675 அனுமதிக்கப்பட்டது** |
| 2 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36, காமராஜர் நகர் பகுதி, சுவாமி அபேதானந்தா சாலையில் 100 மீட்டர் நீளத்திற்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு 90mm PVC பிரதான குழாய் அமைத்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்திட ரூ.0.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.6034/2025/இ1** | **தீர்மானம் எண் 1676 அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>3</td>
<td>நகராட்சிக்குச் சொந்தமான அண்ணா மத்திய பேருந்து நிலையம் பாலக்காடு சாலையில் செயல்பட்டு வருகிறது. இப்பேருந்து நிலைய வளாகத்தின் முன்புறம் பழனி பாதைக்கும், திருப்பூர் பாதைக்கும் இடையில் பயன்படுத்த முடியாமல் இருந்த கடைகளை பொது மக்கள் நலன் கருதி, அனுமதி பெறப்பட்டு இடித்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சியின் வருமான இழப்பை தவிர்க்கும் பொருட்டும், வருமானத்தை பெருக்கும் வகையில் மேற்காணும் பகுதியில் புதியதாக GI சீட் மேற்கூரையுடன் கடைகள் கட்ட வேண்டியுள்ளது.<br>புதியதாக கடைகள் கட்டுவதற்கு ரூ.50.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. இப்பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 5890 /2025/அ6</td>
<td>தீர்மானம் எண் 1677<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>4</td>
<td>நகராட்சிக்குச் சொந்தமான சிக்கன் செட்டியார் நகராட்சிப்பள்ளியில் புதியதாக அங்கன்வாடி மையம் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க எண்:9732/2025/SS2 நாள்: 10.09.2025-ல் கீழ்க்கண்ட நிதி ஆதாரத்துடன் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிதி ஆதாரம்</th><th>தொகை ரூ.(இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>SFC SIG – Capital 2025-26<br>திட்டநிதி தொகை</td><td>10.00</td></tr>
<tr><td>2</td><td>நகராட்சி பங்கு தொகை</td><td>6.50</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>16.50</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண் 1678<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>மேற்காணும் நிதி ஆதரத்தில் குறிப்பிட்டுள்ளபடி நகராட்சி பங்கு ரூ.6.50 இலட்சம் தொகையினை நகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 5079/2025/இ1</td><td></td></tr>
<tr><td>5</td><td>பொள்ளாச்சி நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டம் 2024–25ன் கீழ் நகராட்சிக்குச் சொந்தமான சி.டி.சி மேடு இந்திராநகர், தேர்நிலை மார்க்கெட் அருகில் மற்றும் காமராஜர் நகர் ஆகிய மூன்று இடங்களில் அமைந்துள்ள நகராட்சி பொது கழிப்பிடங்களில் மராமத்துப்பணி மேற்கொண்டு புதுப்பித்தல் பணிக்கு ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை கடித ந.க.எண்.26740/2024/SBM–1(1), நாள்.26.09.2024இல் கீழ்க்கண்ட நிதி ஆதாரத்துடன் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><u>நிதி ஆதாரம் :</u>
<table>
<tr><th>வ.எண்</th><th>நிதி ஆதாரம்</th><th>தொகை<br>(ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>மத்திய நிதி பங்குத் தொகை</td><td>9.25</td></tr>
<tr><td>2</td><td>மாநில நிதி பங்குத் தொகை</td><td>6.11</td></tr>
<tr><td>3</td><td>நகராட்சி பங்குத் தொகை</td><td>3.14</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>18.50</td></tr>
</table>
மேற்காணும் நிதி ஆதாரத்தில் குறிப்பிட்டுள்ளப்படி நகராட்சி பங்கு ரூ.3.14 இலட்சம் தொகையினை நகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2670/2024/இ1</td><td>தீர்மானம் எண் 1679<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 6 | <u>**தனி நபர் தீர்மானம்**</u><br>பொள்ளாச்சி நகராட்சியின் நகர் மன்ற துணைத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தனி நபர் தீர்மானத்தில், பொள்ளாச்சி நகராட்சி 100 ஆண்டுகளை கடந்த சிறப்பு நிலை நகராட்சி ஆகும். நகராட்சியின் மக்கள் தொகை சுமார் 130000 ஆகும். போதிய அளவு மக்களுக்கு குடிநீர் இணைப்புகள் உள்ளன. கடந்த காலங்களில் குடிசை பகுதி மக்களுக்கு பொதுகுடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது, பொது குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படுவதில்லை. குடிநீர் லாரிகள் மூலம், சின்டெக்ஸ் டேங்க் வைத்து வழங்கப்படுகிறது. நகராட்சியிலுள்ள குடிநீர் லாரி சுமார் 33 ஆண்டுகளுக்கு முன்னாள் வாங்கப்பட்டது. தற்பொழுது வாகன பராமரிப்பு செலவு அதிகமாக ஆகிறது. மக்கள் தொகை பெருக்கத்தால் குடிசைப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க மேலும் இரண்டு குடிநீர் லாரிகள் வாங்கவும் நகரின் புறநகர் பகுதிகளில் புதிய மனைப்பிரிவுகள் அமைக்கப்பட்டிருப்பதால், மனைப்பிரிவில் வீடுகள் இல்லாத காரணத்தினாலும், முட்புதர்கள் அதிகமாக உள்ளது. இதை சுத்தம் செய்வதற்கு தனியார் JCB மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, சுத்தம் செய்வதால், செலவினம் அதிகமாக உள்ளது. நகரின் மையப்பகுதியில் உள்ள மரப்பேட்டை பகுதி ஓடையை மழைக்காலங்களில் தூர்வாருவதில் செலவினங்கள் அதிகமாக ஏற்படுகிறது. இதனை தவிர்க்க இரண்டு புதிய குடிநீர் லாரிகளும், புதிய JCB வாகனமும் வாங்க அரசு அனுமதி வழங்க வேண்டுமென தீர்மானத்தை முன்மொழிகிறேன். ஏனைய நகரமன்ற உறுப்பினர்கள் வழிமொழிந்து தீர்மானத்தை நிறைவேற்றித் தர கோரிய விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு. | **தீர்மானம் எண் 1680**<br>**அரசு மானியத்தில் JCB மற்றும் குடிநீர் லாரி கொள்முதல் செய்து கொள்வதற்கு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குனருக்கு முன்மொழிவு அனுப்பி வைக்க அனுமதிக்கப்படுகிறது** |
| 7 | <u>**தனி நபர் தீர்மானம்**</u><br>பொள்ளாச்சி நகராட்சியின் நகர் மன்ற துணைத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தனி நபர் தீர்மானத்தில், பொள்ளச்சி நகராட்சி 100 ஆண்டுகளை கடந்த நகராட்சியாகும். இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பில் M/S.Schnell Energy Equipments(p)Ltd, Coimbatore 02.09.2014 முதல் பராமரிப்பு பணிகள் செய்து வருகிறார்கள். தற்பொழுது நகரில் 300 க்கும் மேற்பட்ட தெருவிளக்குகள் சரிவர எரிவதில்லை. பிரதான சாலைகளான கோவை சாலை, புதிய திட்ட சாலை, பாலக்காடு சாலை, திருவள்ளுவர் திடல், கோட்டூர் மேம்பால சாலை போன்றவற்றில் தெருவிளக்குகள் முழுமையாக எரிவது கிடையாது. இவர்களிடம் | **தீர்மானம் எண் 1681**<br>**M/s.Schnell Energy Equipment(p)Ltd நிறுவனத்தின் தெருவிளக்கு பராமரிப்பு குறைபாடுகள் அடங்கிய செயல்திறனற்ற அறிக்கை நகராட்சி நிருவாக இயக்குநருக்கு அறிக்கை சமர்ப்பித்து அதன் அடிப்படையில் புதிய முகமையை தேர்வு செய்ய முன்மொழிவு** |

| | | |
|---|---|---|
| | போதுமான ஆட்களோ தளவாட பொருட்களோ முறையான வாகனம் வசதியோ கிடையாது. இவர்கள் பராமரிப்பு பணிகள் சரிவர செய்யாத்தால் நகரில் பொதுமக்களிடையே மிக பெரும் அதிருப்தி நிலவுகிறது. நகரமன்ற உறுப்பினர்கள் இதனால் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகி பொதுமக்களுக்கு பதில் கூற முடியாத நிலையில் உள்ளார்கள். மேற்கண்ட நிறுவனம் சரிவர பராமரிப்பு பணியினை மேற்கொள்ளாததால் இவர்களுடைய ஒப்பந்தத்தினை ரத்து செய்து, வேறு நிறுவனத்திற்கு புதிய ஒப்பந்த பணியை வழங்குமாறு கேட்டு இத்தீர்மானத்தினை முன்மொழிகிறேன். ஏனைய நகரமன்ற உறுப்பினர்கள் வழிமொழிந்து தீர்மானத்தினை நிறைவேற்றி தர கோரிய விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு. | **அனுப்பி வைக்க அனுமதிக்கப்படுகிறது** |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா**
**நகர்மன்ற தலைவர்**
**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**பொள்ளாச்சி நகராட்சி**